மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டிற்கு 359 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 14,130 வைப்பறையுடன்கூடிய சமையல் அறை கட்டுவதற்கும், சமையல் அறையை நவீனப்படுத்துவதற்கும், 5,384 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்க வேண்டுமென்றும் உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளியிலே படிக்கக்கூடிய குழந்தைகளில், அதிகமான குழந்தைகள் சத்துணவு உண்பார்களேயானால் எண்ணிக்கையின் அடிப்படையில் அதற்கு முன்னுரிமை தந்து எரிவாயு இணைப்புகள் உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பள்ளிகளிலே அதிகமான குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள், அவர்களுடைய சட்டமன்ற தொகுதியிலா அல்லது சேலம் மாநகராட்சிப் பகுதிகளிலா என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் சத்துணவு சாப்பிடுகிற குழந்தைகளின் எண்ணிக்கையை வைத்து, உடனடியாக அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 384, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

384—

வேளாண் ஆராய்ச்சி நிலையம்

15954*—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2013 மே 3]

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உள்ளதால், புதிதாக வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தேனி மாவட்டத்தில் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும், மக்களுக்கும் பாலமாகச் செயல்படுகிறவர்கள் அரசு ஊழியர்கள். அந்த அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக 8 விழுக்காடு அகவிலைப் படியை உயர்த்தித் தந்த தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 36 விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அதில் 2 ஆதார விதைப் பண்ணைகள். ஒன்று தேனி மாவட்டம், வைகை டேமிலும் மற்றொன்று பவானிசாகரிலும் இருக்கின்றன. தேனி மாவட்டத்தில் இருக்கின்ற அந்த ஆதார விதைப் பண்ணை சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கே செய்யப்படுகிற விதை உற்பத்தி சுமார் 20 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. அந்த விதைப் பண்ணைக்கு கட்டட வசதி நிச்சயமாக வேண்டும். அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற விதைகளும் நாற்றுகளும் பக்கத்தில் இருப்பவர்களால் திருடப்படுகின்றது. அதைத் தடுப்பதற்காக ஒரு fencing *அமைத்துத் தரப்பட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான கேள்வி. விவசாயிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தேவையான கேள்வி. அந்த விதைப் பண்ணைக்கு தண்ணீர் சுமார் 6 கிலோ மீட்டர்*

தொலைவிலிருந்து எடுத்து வரப்படுகிறது. மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக, தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு அங்கே விதை உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே 75 எச்.பி. ஜெனரேட்டர் ஒன்று வாங்கி அந்தப் பண்ணைக்குக் கொடுத்தால், அந்தப் பண்ணை முழுமையாகச் செயல்பட வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்மூலமாக வேளாண் ஆராய்ச்சி நிலையம், தேனியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வைகை அணையில் 50 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட்டு 1995 முதல் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. அந்தப் பண்ணைக்குப் போதுமான கட்டட வசதி இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், அங்கே* fencing *அமைத்துத்தரப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள். அங்கே மின்சாரப் பற்றாக்குறை இருப்பதனால் அதற்குப் போதுமான தண்ணீர் கிடைப்பது இல்லை என்றும் சொல்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை சம்பந்தமாக அங்கே இருக்கின்ற அலுவலர்களை அழைத்துப் பேசி, அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் அது பற்றிப் பரிசீலித்து மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வேளாண் ஆராய்ச்சி மையத்திற்குத் தற்பொழுது 140 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்த இடத்திலே வேளாண் ஆராய்ச்சியின்வாயிலாக பல்வேறு வேலைகளை நாம் செய்யலாம். முதலாவதாக அங்கே ஓர்* Agriculture Polytechnic

2013 மே 3]

கொண்டுவரலாம். எங்களுடைய ஆண்டிப்பட்டி பகுதியிலே நிறைய வெற்றிலைக் கொடிக்கால்கள் இருக்கின்றன. அங்கே விளைகின்ற வெற்றிலைக் கொடிகள் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக ஓர் ஆராய்ச்சிப் பண்ணையை அங்கே கொண்டுவரலாம். அதற்கான நில வசதி, தட்பவெப்ப சூழ்நிலை, மண் வளம் ஆகியவை அங்கே இருக்கின்றன. ஆகவே அங்கே ஓர் Agriculture Polytechnic—க்கும் வெற்றிலைக் கொடிக்கால் ஆராய்ச்சி மையமும் ஏற்படுத்திக் கொடுத்தால் அது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஒன்று வைகை அணைப் பகுதியில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும் அம்மாவட்டத்தில் பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. மேற்கண்ட ஆராய்ச்சி நிலையத்திலும், தோட்டக்கலை கல்லூரியிலும் தேனி மாவட்டத்திற்குத் தேவையான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த அனைத்து ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, தேனி மாவட்ட வேளாண் பெருமக்கள் தொழில்நுட்ப ரீதியாக எதிர்பார்க்கின்ற மற்றும் வேளாண் சார்ந்த இடர்ப்பாடுகளைக் களைவதற்கு பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் வைகை அணை வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் உரிய ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள். இது தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேனி மாவட்டத்தில் 28.48 ஏக்கர் பரப்பளவில் மல்லிகாபுரம் அருகில், ஆணைமலையம்பட்டி கிராமத்தில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, ஆராய்ச்சி நிலையங்கள் நிறைய இருப்பதால், நம்முடைய விவசாயிகள் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2013 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா எண் 380 சம்பந்தமாக நான் கூறிய பதிலில் ஒரு திருத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியம் சம்பந்தமாக கேட்ட கேள்விக்கு நான் முன்னர் கூறிய பதிலுக்கு மாற்றாக இப்போது நான் கூற இருக்கின்ற பதிலை பதிவு செய்து திருத்தமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டணங்களை மாற்றி அமைப்பது குறித்து மத்திய மின்சார ஆணையத்தினுடைய உத்தரவின்பேரில் இன்றைக்கு பொதுமக்களிடம் கருத்து கேட்டு வருகின்றது. இன்றைக்குக்கூட அந்தக் கருத்துக் கேட்புப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்த கருத்துக் கேட்பிற்குப் பின்பு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்ன முடிவை அறிவிக்கும் என்பதை இப்போது சொல்ல இயலாது.*

முற்பகல் 10–35

பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டதற்குப் பின்பு மத்திய அரசின் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவினை ஏற்று மாற்றியமைக்கப்படுமானால், அவ்வாறு மாற்றியமைக்கப்படுகின்ற கட்டணம் எந்தெந்த வகையில் மாற்றியமைக்கப்படுகிறது, எவ்வளவு கட்டணம் கூடுதலாக மாற்றியமைக்கப்படுகிறது என்பதையெல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுமக்களை எந்த நிலையிலும் பாதுகாப்பார்கள். ஆகவே, பொதுமக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாதவகையில் அந்த மின் கட்டண உயர்வை எப்படி எதிர்கொள்வது என்பதையெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரிவாக சிந்தித்து, மக்களைப் பாதுகாக்கின்றவகையில் ஒரு நல்ல அறிவிப்பினை வெளியிடுவார்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)